# தொழிலாளர் தலைவர் நடேசய்யரும் பெண்ணியவாதி மீனாட்சியம்மாளும்

குமாரி ஜயவர்த்தன
ரஷேல் குரியன்



# தொழிலாளர் தலைவர் நடேசய்யரும் பெண்ணியவாதி மீனாட்சியம்மாளும்

ஆங்கில மூலம்
குமாரி ஜயவர்த்தன
ரஷேல் குரியன்

தமிழாக்கம்
க. சண்முகலிங்கம்

2016

தொழிலாளர் தலைவர் நடேசய்யரும்
பெண்ணியவாதி மீனாட்சியம்மாளும்

ஆங்கில மூலம்
குமாரி ஜயவர்த்தன, ரஷேல் குரியன்

தமிழாக்கம்
க. சண்முகலிங்கம்

2016

அச்சு
குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

# 1. அறிமுகம்

இலங்கையின் தோட்டத் தொழிலாளர்கள் காலனிய அரசாங்கத்தாலும் தோட்ட முதலாளிகளாலும் 1930கள் வரை அடிமைகள் போன்றே லயச் சிறைகளில் வைக்கப்பட்டிருந்தனர். தோட்டங்களின் எல்லை களுக்குள்ளேயே அவர்கள் உலகம் இருந்தது. சுரண்டல் முறையின் கீழ் அவர்களின் உழைப்பு பிழிந்தெடுக்கப்பட்டது. தோட்ட நிர்வாகக் கட்டமைப்பு படிக்கட்டமைப்புடையதாயும், வன்முறை மிகுந்ததாயும் இருந்தது. நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் துன்புறுத்தல் களுக்கு உள்ளாக்கப்பட்ட இம்மக்களின் அன்றாட வாழ்க்கை துயர் மிகுந்ததாய் இருந்தது. பிரித்தானியரும், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தோட்டத் தொழிலாளர் களின் வேலை நிலைமைகளை மேம்படுத்தும் சட்டங்களை கொண்டு வருவதற்கு முயற்சித்தனர். அவர்களது வாழ்க்கையை மேம்படுத்த அவர்கள் முயன்றனர் என்பது உண்மையே ஆயினும் தோட்ட முறைமையையும், கட்டமைப்பையும், அதன் இயல்புகளையும் கேள்விக்குட்படுத்தவோ, மாற்றவோ அவர்கள் முன்வரவில்லை. அவர்களில் எவராவது தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டி தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராட வேண்டும் என்ற உற்சாகத்தை வழங்கவில்லை. பிரித்தானியாவின் சமூகத் தலைவரான கேர்னல் யொசியா வெட்ஜ்வுட் என்பவர் மட்டுமே இவ் விடயத்தில் விதிவிலக்கானவராக இருந்தார். 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே இலங்கையின் பிறபாகங்களில் தொழிற் சங்க இயக்கம் தோன்றி வளரத் தொடங்கியிருந்தது. ஆயினும் தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டவர்களாய் இருந்தனர். அவர்கள் கூட்டாக ஒன்றிணைந்து கூலி உயர்வுக்காகவும், வேலை நிலைமைகளில் முன்னேற்றம் வேண்டியும் போராட முடியாதவர்களாய் இருந்தனர். இது அன்று அதிகாரத்தில் இருந்தவர்களின் பலத்தை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

நடேசய்யரின் வருகை தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவர்

i. தொழிற்சங்க இயக்கத்தைத் தோட்டத் துறையில் தொடக்கிவைத்தார்.

ii. தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான சீர்திருத்தச் சிந்தனைக்கு மாறுபட்டதான தொழிலாளர் இயக்கத்தை இவர் உருவாக்கினர். முதலாளித்துவ முறையையும் அதன் சுரண்டல் கட்டமைப்பையும் கேள்விக்குட்படுத்தும் இயக்கமொன்றிற்கான அடித்தளத்தையிட்டார்.

தோட்டத் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம் ஒன்றினை ஆரம்பித்து ஒரு பண்பு மாற்றத்தைக் கொண்டு வந்த பெருமை நடேசய்யருக்கு உரியது. அவரோடு இணைந்து செயற்பட்ட அவரது துணைவியார் பெண்ணியவாதச் சிந்தனையை தோட்டத்துறையில் விதைத்தார். இதன் மூலம் இன்னோர் பண்பு மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு நடேசய்யருக்குத் துணையாக நின்று செயற்பட்டார். இச்சிறு நூல் தொழிலாளர் இயக்கத்திற்குக் கிளர்ச்சி வாதிகளான இவ்விருவரும் செய்த அரிய பங்களிப்பினை விளக்குவ தாய் அமைந்துள்ளது. தோட்டத்துறையில் தொழிற்சங்க இயக்கத்தை வளர்ப்பதில் நடேசய்யருக்குத் துணைநின்ற மீனாட்சியம்மாள் இலங்கையில் பெண்ணியவாதச் சிந்தனையின் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

## 2. நடேசய்யர் வருகை

### முதலாளி தொழிலாளி உறவுகளில் பெருமாற்றம்

தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையும் அவர்கள் சுரண்டப் படுவதும் பொது அரங்கிலும் அரசியல் களத்திலும் முக்கியத்து வமுடைய விடயமாக மாற்ற உதவியவர்கள் எஸ். கோதண்டராம நடேசய்யரும் அவரது மனைவி மீனாட்சி அம்மாளும் ஆவர். அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள், அவர்களது பிரஜா உரிமை ஆகியன பற்றிக் காலனிய அரசுக்கு எடுத்துக் கூறி அரசாங்கக் கொள்கை வகுத்தலில் செல்வாக்குச் செலுத்தினர். அத்தோடு நின்றுவிடாது தோட்டங்களின் பெண் தொழிலாளர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் துன்பங்களிலும் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களிலும் தமது விசேட கவனத்தை செலுத்தலாயினர். தோட்டங்களின் ஆண்களையும், பெண்களையும் தொழிற்சங்கங்களில் இணையுமாறு இத் தம்பதியினர் தூண்டுதல் கொடுத்து உற்சாகமளித்தனர். அவர்களின் நடவடிக்கைகள் தோட்டங்களில் நிலவிய முதலாளி - தொழிலாளி உறவுகளில் பெரிய தொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அத்தோடு தொழிலாளர் மத்தியில் தம் வேலை, வாழ்க்கை பற்றிய உணர்வு நிலையில் பெரு மாற்றத்தையும் ஏற்படுத்தியது. தொழிலாளர்களை விழித்தெழவைத்தனர். பெண்களின் உரிமைகளை துச்சமென மதிக்கும் ஆணாதிக்கச் சிந்தனையைத் தகர்த்துப் பெண் தொழிலாளர்கள் ஆண்களோடு சமதையாக இணைந்து போராட வைத்த பெருமை நடேசய்யருக்கும் மீனாட்சியம்மாளுக்கும் உரியதாகும்.

அரசியல் தளத்திலும், வேறுவகைப் பொது விடயங்களிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 1920கள் வரை தனிமைப்படுத்தப்பட் டவர்களாயும், பிரதிநிதித்துவம் அற்றவர்களாயும் இருந்து வந்தனர். ஆயினும் பெருந்தோட்ட மூலதனத்தின் நலன்கள், எல்லாவகை அரச நடவடிக்கைகளிலும், சட்ட சபையிலும் மிகையான வகையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன. தோட்டத் தொழிலாளர்கள் மீது தோட்டத்துரைமார் வைத்திருந்த இறுக்கமான பிடியில் ஓர் தளர்வு எஸ். கோதண்டராம நடேச ஐயர் (1887 - 1947) வரவால் ஏற்பட



கோதண்டராமையர் நடேசய்யர்

லாயிற்று. அவர் தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டமை ஒரு திருப்பு முனையாகும். பிறப்பால் பிராமணரான நடேச ஐயர் கவர்ச்சி மிகுந்த போச்சாளராவார்; அரசியல் தீர்க்க தரிசனம் கொண்டவர்; நகரத் தொழிலாளர் வகுப்பின் போராட்டங்களில் அனுபவம் மிக்கவராய் இருந்தவர். அவர் வர்த்தகவியலைப் படித்துத் தேறியவராய் இருந்தார். பின்னர் ஒரு ஊடகவியலலாளராகப் பணிபுரிந்தார். இலங்கைக்கு வந்த நடேச ஐயர் தோட்டங்களில் வேலைக்காக இங்கு வந்த இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளில் மிக விசேட அக்கறை செலுத்தினார். அங்கு நிலவிய ஈவிரக்கமற்ற சுரண்டலை வெளிப்படுத்துவதற்கு தனது அறிவையும் திறன்களையும் பயன்படுத்தினார். 1931 ஆம் ஆண்டில் அகில இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்றைத் தொடங்கினார். அது வரை காலமும் ஊடுருவ முடியாத ஒரு பகுதியாக இருந்த தோட்டத் துறையில் இத் தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை ஒரு பெரும் திருப்பமாக அமைந்தது.

தொழிலாளர் போராட்டங்களிலும் அரசியலிலும் ஈடுபட்ட செயற்பாட்டாளரான நடேசய்யரிடம் அனுபவமும் திறமைகளும் இருந்தன. தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வேலை நிலை பற்றிய விரிந்த அறிவு அவரிடம் இருந்தது. அவரிடம்



படிப்போரைக் கவர்ந்திழுக்கும் எழுத்தாற்றல் இருந்தது. தொழிலாளர்களை அணிதிரட்டுவதில் அவருக்கு இருந்த திறமை ஈடு இணையற்றது.

சட்டசபையில் நடேசய்யர் ஆற்றிய உரைகள், தொழிற்சங்க இயக்கத்திற்கு அவர் வழங்கிய பங்களிப்பு என்பன அரசாங்கத்திற்கும், தோட்ட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களின் பலத்தையும் அவர்கள் ஒன்றுபட்டு தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடினால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் உணர்த்துவனவாய் அமைந்தன. நடேச ஐயர் ஒரு தீர்க்கதரிசி. அவர் அக்காலத்திலேயே பல உண்மைகளைக் கண்டுணர்ந்து கூறிவைத்தார். இலங்கையில் நிலவிய சுரண்டல் முறையின் கீழ் இந்திய தொழிலாளர் படும் துயரை எடுத்துக்காட்டி அவர்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்று குரல் கொடுத்தார். பெண்களுக்கு உயர்ந்த கூலி வழங்கப்பட வேண்டும், தோட்டத் துறைச் சிறுவர்களுக்குக் கல்விக்கான உரிமை உண்டு என்பனவற்றையும் அவர் எடுத்துக் கூறினார்.

## 3. வீரம் மிக்க அரசியல் செயற்பாடுகள்

நடேசய்யர் 1887 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். தென்னார்க்காடு வளவனூர்க் கிராமத்தில் இவர் தந்தை கோதண்டராமய்யர் தாசில்தாராக இருந்தார்.[1] வர்த்தகத் துறையில் உயர் கல்வியைக் கற்ற நடேசய்யர் வர்த்தகத்துறைப் பயிற்சிப் போதனாசிரியராக தஞ்சாவூரில் உள்ள உயர்தரக் கலாசாலை ஒன்றில் சில காலம் பணியாற்றினார். 1914 ஆம் ஆண்டு முதல் 'வர்த்தக மித்திரன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத் திவந்தார்.[2] தனது 'வர்த்தக மித்திரன்' பத்திரிகைக்குச் சந்தா சேர்ப்பதற்காக நடேசய்யர் 1919 ஆம் ஆண்டு கொழும்பு வந்தார். அவ்விதம் கொழும்பு வந்தவர் இலங்கையில் தோட்டங்களில் அடிமை வாழ்க்கை வாழும் இந்தியத் தொழிலாளர் நிலை பற்றி நேரில் அறிந்து கொண்டார். இந்தியா திரும்பிய அவர் தனது பத்திரிகையை நடத்தும் பொறுப்பை உதவியாசிரியர் வ. ரா.விடம் ஒப்படைத்துவிட்டு இலங்கைக்கு வந்து தொழிற்சங்க இயக்கத்திலும், இலங்கை அரசியலிலும் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார்.[3] இலங்கை வந்த அய்யருக்கு 'தேசநேசன்' என்ற தேசியவாதப் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

1926 ஆம் ஆண்டு நடேசய்யர் மீனாட்சியம்மாள் திருமணம் கொழும்பு நகரில் நடைபெற்றது. 1942 ஆம் ஆண்டு தென்னிந்தியா திரும்பிய மீனாட்சியம்மாள் 1943 ஆம் ஆண்டு காலமானார்.[4] ஏறக்குறைய 16 ஆண்டுகள் நடேசய்யருடன் வாழ்ந்த மீனாட்சியம்மாள் அய்யரின் பத்திரிகைப் பணிகளிலும் தொழிற்சங்க, அரசியலிலும் உறுதுணையாக இருந்தார். மீனாட்சியம்மாள் தமிழில் சிறந்த புலமை உடையவராக இருந்தார். ஒரு கவிஞராகவும், இசையில் ஆழமான ஈடுபாடு கொண்டவராகவும், எழுத்தாளராகவும் விளங்கிய மீனாட்சி யம்மாள் நடேசய்யரின் வலது கரம் போன்று விளங்கினார். இரு கிளர்ச்சிவாதிகள் கணவனும் மனைவியுமாக இணைந்துகொண்டமை தோட்டத் தொழிலாளர் இயக்கத்திற்குப் பெரும் உத்வேகத்தை அளித்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிர்வாகக்குழு உறுப்பினர்களான எம்.ஏ. அருளானந்தம், டாக்டர். இ.வி. இரத்தினம் ஆகிய இருவரும்




வர்த்தகமித்திரன்.
(THE MERCHANTS' FRIEND.)
NOTICE.
A. M. GULAMALLY & Co.

*1914 ஆம் ஆணடு நடேசய்யர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக மித்திரன் பத்திரிகையின் முகப்புப் பக்கம் ஒன்று*

தேசநேசன் பத்திரிகையின் உரிமையாளர்களாவர். நடேச ஐயர் பின்னர் 'சிற்றிசன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையினையும் பிரசுரித்தார். இதன் ஆசிரியராக லோறி முத்துக்கிருஷ்ணா கடமையாற்றினார். இலங்கையின் தேசியவாதிகளுடன் நடேசய்யர் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் பொலிசார் அவர் மீத ஒரு கண்வைத்திருந்தனர். அத்தோடு 'சிற்றிசன்' பத்திரிகை அரசாங்கத்தை விமர்சித்து எழுதிவந்தபடியால் அதனை ஒரு தேசதுரோகப் பத்திரிகையாகப் பொலீசார் கருதினர். அப்பத்திரிகை இந்திய தேசியவாதிகளை ஆதரித்ததோடு இந்தியாவுக்கும் இலங்கைக் கும் பூரண சுதந்திரம் வழங்கவேண்டும் என்ற கருத்தையும் கூறிவந்தது.[5]

அக்காலத்தில் நடேசய்யர் அரசாங்கத்தால் ஒரு 'கிளர்ச்சிவாதி' எனக் கருதப்பட்டார். எம். டி. மணிலால் என்ற தேசியவாத வழக்கறி ஞருடன் நடேசய்யருக்குத் தொடர்பு இருந்ததைப் பொலீசார் அறிந்து கொண்டதால் அவர் மீதான சந்தேகம் மேலும் வலுத்தது. மணிலால் பிஜி, மாலைதீவு ஆகிய இடங்களில் பணிபுரியும் இந்தியத் தொழிலாளர் களுக்காக வாதாடி வந்தவர். அவருக்குக் கம்யுனிஸ்டுகளுடன் தொடர்பு இருப்பது பற்றியும் சந்தேகிக்கப்பட்டது. 1922 இல் மணிலால் நாடு கடத்தப்பட்டபோது நடேசய்யர் அதையெதிர்த்து எதிர்ப்புக் கூட்டங் களை ஒழுங்குசெய்தார். இலங்கைத் தொழிலாளர் சங்கம் எனப்படும்


தேச நேசன்
(THESA-NESAN)

*நடேசய்யர் அவர்களால் 1920 - 1923 வரை வெளியிடப்பட்ட*
*'தேவநேசன்' பத்திரிகை*

நகரத் தொழிலாளர் சங்கத்திலும் தீவிர செயற்பாடுள்ள ஒருவராக நடேசய்யர் இருந்தார். 1926 க்கும் 1928 க்கும் இடைப்பட்ட காலத்தில் சிங்களவரான ஏ.ஈ குணசிங்க என்ற தொழிற்சங்கத் தலைவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றினார். 1920 களில் தோட் டத் தொழிலாளர்களின் பரிதாபநிலை கண்டு அனுதாபம் காட்டிய தொழிற்சங்கத் தலைவர்களில் ஏ.ஈ. குணசிங்கவும் ஒருவராவார். நடேசய்யரும் குணசிங்கவும் 'Forward'என்னும் பத்திரிகையின் இணை ஆசிரியர்களாக இருந்தனர். இந்த ஆங்கிலப் பத்திரிகை இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என்று குரல் கொடுத்தது. இங்கையின் அரசியல் தலைவர்களை இப்பத்திரிகை தாக்கி எழுதியதோடு முசோலினியையும் கண்டனம் செய்து எழுதியது[6]. 1927 ஆம் ஆண்டின் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது நடேசய்யர் ஏ.ஈ. குணசிங்கவிற்கு உதவினார். துறைமுகத்தில் வேலை செய்த இந்தியத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் சேர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார். இருவரும் சேர்ந்து வர்த்தகர்களிடம் வேலை நிறுத்தத்திற்காக நிதி திரட்டினர். நகரத் தொழிலாளர் வர்க்கத்தின் தொழிற்சங்க இயக்கத்தில் நடேச ஐயர் பெற்றுக் கொண்ட அனுபவம்,




The Citizen
A Weekly Review of Life and Thought
PUBLISHED EVERY SUNDAY.
Our Friends from Fiji

*1922 ஆம் ஆண்டு நடேசய்யரால் வெளியிடப்பட்ட*
*'சிட்டிசன்' ஆங்கிலப் பத்திரிகை*

தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவது பற்றிய தெளிவான அறிவையும் ஆழமான நோக்கையும் அவர் பெற்றுக் கொள்ள உதவியது. தொழிலாளர்களிடம் மறைந்திருக்கும் பெரும் ஆற்றலை அவர் உணர்ந்தார். நடேச ஐயரும் குணசிங்கவும் ஒன்றிணைந்தமை இலங்கை வரலாற்றில் தோட்டத் தொழிலாளர்கள் நகரத் தொழிலாளர்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான முதற் படியாகும். எனினும் இருவருக்கிடையிலான உறவுகள் நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஏ.ஈ. குணசிங்கவை இந்திய விரோதி என நடேசய்யர் குற்றம் சாட்டினார். இலங்கை அரசாங்கம் சட்டசபையில் இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட காலத்திலேயே இப்பிளவு ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. 1923 ஆம் ஆண்டில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இச் சீர்திருத்தத்தின் பயனாக இந்தியர்களின் பிரதிநிதிகளாக இருவர் சட்டசபைக்கு நியமிக்கப்பட்டனர். இந்தியர் களின் வியாபார நலன்களை எடுத்துக் கூறுவதற்கான அரங்கமாகவே முதலில் சட்டசபை விளங்கியது. இந்த அரங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கக்கூடிய


The Forward

PUBLISHED EVERY SUNDAY.

THE GOSPEL OF DISCONTENT.

*நடேசய்யர் அவர்களினால் 1926 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'போர்வேட்' ஆங்கில பத்திரிகை*

அரங்காக நடேசய்யர் மாற்றினார். இலங்கையில் வாழ்ந்த இந்தியர் களுக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப் பட்ட வாக்குரிமையை உபயோகித்து நடேசய்யர் சட்டசபை உறுப்பின ராகத் தெரிவுசெய்யப்பட் டார். அவர் சட்டசபை உறுப்பினரானதும் தோட்டங்களின் இந்தியத் தொழிலாளர்களின் அவல நிலையை சட்ட சபையில் எடுத்துக் கூறினார். இவர் எழுதிய சிறு நூல்களில் மிகவும் முக்கியமானது *Under Planter Raj* (1925) (தோட்ட முதலாளிகள் இராச்சியத்தில்) என்பதாகும். 1920 களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'தரப்படுத்திய கூலி' (Standard Wage) என ஒன்றை வகுத்துக்கொள்வதற்குத் தோட்ட முதலாளிகள் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து முயற்சி செய்து வந்தனர். மேற்படி பிரசுரம் தரப்படுத்திய கூலித்திட்டம் பற்றிய கடுமையான கண்டனமாக அமைந்தது.

## 4. தோட்டத் தொழிலாளர்களின் கூலி பற்றிய சட்டசபை விவாதம்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி யிலும் காலனித்துவ அரசாங்கம் தோட்டங்களில் நிலவிய வேலை நிலைமைகள் பற்றியும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தவில்லை. அரசாங்கம் தோட்ட முதலாளிகள் சார்பாகவே நடந்துகொண்டது. தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை. தொழிலாளர்களுக்கு வழங்கும் ஆகக் குறைந்த கூலி எவ்வளவாக இருத்தல் வேண்டும் என்ற விடயமும் கவனிக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்படவேண்டும் என்பதை அருணாசலம் தமது கோரிக்கை யாக முன்வைத்தார். இலங்கை அரசாங்கம் இதனைப் பற்றி மௌனம் சாதிக்க முயற்சித்தது. தோட்ட முதலாளிகளின் எதிர்ப்புக்கு அரசாங்கம் அஞ்சியது. இதனை விட ஏனைய துறைகளின் தொழிலாளர்களும் அடிப்படையான குறைந்த கூலி என்ற கோரிக்கையை எழுப்புவார்கள் என்ற அச்சமும் அரசுக்கு இருந்தது. 1922 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் பிற காலனிகளில் தொழிலுக்காக இடம்பெயர்ந்து சென்று வேலை செய்யும் இந்தியர்களின் வேலை நிலைமைகள் பற்றி மேற்பார்வை செய்யும் முடிவை மேற்கொண்டது. இதனால் இந்திய அரசாங்கமே அடிப்படையான குறைந்த கூலி என்ற விடயம் பற்றிக் குறிப்பிட்டது. அவ்வாண்டில் இந்தியக் குடியகல்வுச் சட்டம் இயற்றப் பட்டது. இச் சட்டம் இந்தியர்களை பிற காலனிகளிற்கு ஆட்சேர்ப்புச் செய்தல், அவர்களின் இடப்பெயர்வு என்பன அரசாங்கத்தின் மேற் பார்வையின் கீழ் கொண்டுவர வழி செய்தது. இந்தியக் குடியகல்வுச் சட்டம் இந்தியத் தொழிலாளர்கள் கடன் சுமையால் அழுந்துவதைக் கவனத்தில் கொண்டது. சட்டத்தில் தொழிலாளர்களின் இன்னல்களை நீக்குவதற்குப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலனிகளிற்கு அழைத்துச் செல்லப்படும் இந்தியர்களின் போக்குவரத்துச் செலவுகளும், போக்குவரத்தின்போது ஏற்படும் உணவு முதலிய செலவுகளும் அவர்களுக்கு வழங்கப்படவுள்ள கூலியில் இருந்து கழித்துக்கொள்ளக் கூடாது என்றும் அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளி ஏதாவது தகுந்த காரணத்திற்காக ஒரு வருட முடிவில் இந்தியாவிற்குத் திரும்ப

விரும்பினால் அவ்வாறு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்றும் சட்டத்தில் விதிக்கப்பட்டது. திரும்பி வருவதற்கான பிரயாணச் செலவை ஆட்சேர்ப்பு முகவரே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கூறப்பட்டது.

இலங்கையில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர் விடயத்தில் குடியகல்வுச் சட்டம் பின்விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியத் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் விடயம் முதற் தடவையாக இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உரியதாயிற்று. அதுவரை இருந்துவந்த கங்காணி முறைப்படி 'சுதந்திரமாக' தொழிலாளர்கள் வேலைக்காக இடம் பெயர்வதாகக் கருதப்பட்டதால் அரசாங்கத்தின் தலையீடு தேவையில்லை எனக் கருதப்பட்டது. தொழிலாளர்களின் போக்குவரத்து இலவசமாக அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் சட்டத்தில் விதிக்கப் பட்டது. ஆட்சேர்ப்புச் செலவுகளை தொழிலாளியின் சம்பளத்தில் கழித்துக்கொள்வது முடிவுக்கு வந்தது. இதனால் முற்பணம் எனக் கொடுக்கப்பட்டவற்றை கங்காணிமாரும், தோட்டத்துரைமாரும் கடனாக மாற்றித் தொழிலாளர்களின் மேல் கடன் பளுவைச் சுமத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டது. இதனை விட நாடு திரும்ப விரும்பும் தொழிலாளர்கள் இந்தியாவின் அரசப் பிரதிநிதியுடன் தொடர்பு கொள்ளலாம். அவர் இலங்கை அரசாங்கமும் தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் அளிக்கும் நிதியில் இருந்து நாடு திரும்ப விரும்பும் தொழிலாளியின் போக்குவரத்துச் செலவைச் செய்யலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவின் குடியகல்வுச் சட்டத்தைத் தொடர்ந்து 1923 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் இந்தியத் தொழிலாளர் குடிவரவுச் சட்டம் என்னும் சட்டத்தை இயற்றியது. இச் சட்டமும் போக்குவரத்துச் செலவுகளைத் தொழிலாளி ஏற்க வேண்டியதில்லை என உறுதி செய்தது. இது போன்ற தொழிலாளர் பாதுகாப்பு ஏற்பாடுகள் சட்டத்தில் சேர்க்கப்பட்ட காரணத்தால் 'இந்தியத் தொழிலாளர் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்' என்ற பதவியில் ஒருவர் நியமிக்கப்பட்டார்[8]. அத்தோடு இந்திய அரசாங்கம் இலங்கையின் தோட்டங்களில் தொழில் புரியும் இந்தியத் தொழிலாளர்களது சம்பளம், வாழ்க்கைச் செலவு என்பன பற்றி விசாரணை செய்யும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தது. 'தரப்படுத்திய கூலி' யை நிர்ணயிப்பதே இந்திய அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. இலங்கை அரசாங்கம் இவ்விடயம் பற்றி ஆராய்வதற்குக் குழு ஒன்றை நியமித்தது. இக் காலத்தில் தான் கோ. நடேசய்யர் சட்டசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவர் விசாரணைக்குழுவின் சிபாரிசுகளைக் கண்டித்துச் சட்டசபையில் உரையாற்றினார்.



இந்திய அரசாங்கம் முன்வைத்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. ஆனால் இது தோட்ட முதலாளிகளிற்கு உள்ளக் கொதிப்பை ஏற்படுத்தியது. இந்திய அரசாங்கம் இலங்கையில் உள்ள பிரித்தானியப் பிரஜைகளின் சுதந்திரத்தில் தலையிடுவதாகவும், எதேச்சதிகாரமான அதிகாரத்தைப் பிரயோகிப்பதாகவும் தோட்ட முதலாளிகள் கண்டனம் செய்தனர்[9] (தோட்ட முதலாளிகள் சங்கம் ஆண்டு அறிக்கை 1925, 16-17). ஆயினும் தோட்ட முதலாளிகள் சங்கத் தலைவர் இந்திய அரசாங்கத்திற்கு இலங்கைக்குத் தொழிலாளர்களை அனுப்புவதை தடைசெய்யும் உரிமை உள்ளதைச் சுட்டிக்காட்டி, முதலாளிகள் தமது கண்டனத்தை தெரிவிக்கும் போது அவதானமாக இருக்கவேண்டும் என எச்சரித்தார். அரசாங்கமும் முதலாளிகள் 'மிகவும் கடினமான ஒரு விடயத்தில் மோதலுக்கு நிற்கிறார்கள். இதனைவிடுத்து இந்தியாவின் கருத்துப்படி நடந்துகொள்வது நல்லது' என்று ஆலோசனை கூறியது. இந்தியத் தொழிலாளர் குடிவரவுக் கட்டுப்பாட்டளரும் முதலாளிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். இந்திய அரசாங்கம் இந்தியத் தொழிலாளர் இங்கு வருவதை ஒரு நொடியில் எடுக்கும் தீர்மானம் மூலம் நிறுத்திவிடலாம் என்றும் தனக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் இந்தியாவின் ஆளுநர் நாயகத்தின் ஆலோசக உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அத்தோடு பீஜித் தீவுகள், மொரீசியஸ், மேற்கிந்திய தீவுகள் ஆகியனவற்றுக்கு இந்தியத் தொழிலாளர்கள் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.[10] (தோட்ட முதலாளிகள் சங்கம் ஆண்டறிக்கை 1925). இந்திய அரசாங்கம் 'தரப்படுத்திய கூலி' 'குறைந்த மட்டக் கூலி' ஆகிய விடயங்களில் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்ததாலும், இந்தியத் தொழிலாளர் இலங்கைக்கு அனுப்பப்படுவதைத் தடுக்கலாம் என்ற பயத்தாலும் இலங்கை அரசாங்கம் 'குறைந்த மட்டக் கூலி' என்ற கொள்கையை இறுதியில் ஏற்றுக் கொண்டது. தோட்ட முதலாளிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசு இம் முடிவுக்கு வந்தது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மட்டம், அவர்களது வாழ்க்கைச் செலவு என்ற இரண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்கி ஏழு உறுப்பினர்கள் கொண்ட விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பித்தது.

## 5. 'தோட்ட முதலாளிகள் இராச்சியத்தில்'

தொழிலாளர்களுக்கான தரப்படுத்திய கூலி, குறைந்த மட்டக் கூலி என்பன பற்றிய விவாதம் இந்திய அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக எழுந்த பின்னனியிலேயே நடேச ஐயர் *'Under Planter Raj: the Standard Wage in Ceylon'* (தோட்ட முதலாளிகள் இராஜ்சியத்தில்: இலங்கையில் தரப்படுத்திய கூலி) என்ற பெயரில் ஒரு சிறு பிரசுரத்தை வெளியிட்டார். இது குழுவின் அறிக்கை பற்றிய காரசாரமான கண்டனமாக அமைந்தது. தரப்படுத்தியகூலி பாரபட்ச நோக்குடன் வகுக்கப்பட்டது. அது தொழிலாளர்களுக்குப் போதிய அளவில் இல்லை என்று நடேசய்யர் குறிப்பிட்டார். அறிக்கையில் 'மறுத்துரைக்க முடியாத உண்மைகளும் புள்ளிவிபரங்களும்' தரப்பட்டுள்ளதாக கூறப்பட்டதேனும் அஃவ்வறிக்கை 'பக்கச் சார்பானது' என்றும் 'தொழிலாளர்களின் ஆகக் குறைந்த பிழைப்பு மட்டத்திற்கு' குறைந்ததாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார். குழுவில் நான்கு பேர் தோட்ட முதலாளிகள் ஆவர். ஆகையால் குழுவின் அறிக்கை '6 1/2 லட்சம் இந்தியத் தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது திரித்து எழுதப்பட்டது' என்று நடேசய்யர் குறிப்பிட்டார். 'குரல் இல்லாதவர்களான இந்தியத் தொழிலாளர்களின் நலன்களை பாது காப்பதற்குச் சிறிதளவேனும் குழு முயற்சிக்கவில்லை' என்றும் அவர் எழுதினார். (நடேச ஐயர் 1925, 4-5)[11]

இலங்கையில் இந்திய முகவராக இருந்த திரு. ரெங்கநாதன் தோட்டத் தொழில்லாளர்களின் குடும்பத்தின் வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இதன்படி 40 வீத இந்தியத் தொழிலாளர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்தக்கூடிய கூலியைப் பெறுவதில்லை என்ற முடிவுக்கு அவர் வந்தார். 'நோய், வேலையில் திறமையின்மை, குறைந்த கூலி' என்ற நச்சுவட்டம் தோட்டங்களில் செயற்படுகிறது என்று அவர் கருத்துரைத்தார். ஆனால் நடேச ஐயர் ரெங்கநாதன் வகுத்த வரவு செலவுத்திட்டக் கணக்கினை ஏற்கவில்லை. தனது கணிப்பீட்டின்படி 15 வீத தொழிலாளர்களே போதியளவு சம்பளத்தைப் பெறுகின்றனர் என நடேசய்யர் கூறினார்.[12] (1925: 6) குறைந்த கூலியைக் கொடுத்தது மட்டுமல்ல, அதனை உரிய தவணையில்





கொடுக்காது காலம் தாழ்த்துவதன் மூலம் அநீதி இழைக்கப்படுவதை அவர் எடுத்துக் காட்டினார். இவ்வாறு உரிய திகதியில் கொடுக்காமல் சாதாரணமாக 50 நாட்கள் பிந்தியே கூலி கொடுக்கப்படும். அவ்வாறு கொடுக்கப்படும் போது அறியாமைமிக்க தொழிலாளிக்கு என்ன அடிப்படையில் தன் கூலி கணக்கிடப்பட்டது என்பதே தெரியாமல் இருக்கும்[13] (நடேச ஐயர் 1925:7). காலம் கடத்திக் கூலி வழங்கல், 'செக்றோல்' மோசடி போன்ற வழிகளில் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களின் கூலியைப் பறித்து அவர்கள் வயிற்றிலடிப்பதையும் நடேசய்யர் எடுத்துக் காட்டினார். ஒவ்வொரு வாரமும் கூலியைக் கொடுத்தால் தொழிலாளர்களுக்குத் தன் கூலி எவ்வளவு என்பது தெரியவரும் எனவும் அவர் கூறினார். துண்டு முறை உத்தியோக ரீதியில் ஒழிக்கப்பட்ட பின்னரும் தோட்ட முதலாளிகள் முற்பணமாகக் கடன் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டனர். ஆனால் கூலியை உயர்த்திக் கொடுக்க அவர்கள் முன்வரவில்லை. ஊக்குவிப்புக் கொடுப் பனவுகள், கடன் முற்பணங்கள் வழங்கல், போனஸ் கொடுப்பனவு, அரிசியின் விலையைக் குறைத்தல் போன்ற வழிகளில் தொழிலாளர் களுக்கு உதவ ஒரு போதும் முன்வரவில்லை (நடேசய்யர் 1925:10).[14] இத்தகைய இரக்கமற்ற மனப்பான்மை தொடர்ந்தமை, தோட்ட முதலாளிகள் அரை நிலமானிய முறையையும், அடிமை முறையையும்

தொழில் உறவுகளில் தொடர்வதையே விரும்பினர் என்பதை எடுத்துக் காட்டுவதாய் இருந்தது.

தொழிலாளர்களின் பலத்தில் நடேச ஐயர் நம்பிக்கை வெளியிட்டார். இது தொழிலாளர்களின் கூலி பற்றிய அவரது இடதுசாரிச் சிந்தனைப் போக்கை எடுத்துக்காட்டியது. அவர் தோட்டமுதலாளிகள் தரப்படுத்திய கூலியை ஏற்க மறுத்ததையும் அதனை நிறுவனமயப்படுத்துவதை விடுத்துக் கூலியை கேள்வி-நிரம்பல் என்ற சந்தை விதிகளால் தீர்மானிக்கப்படுவதையே விரும்பியதையும் எடுத்துக்காட்டிக் கண்டனம் செய்தார்.

‘உழைப்புச் சக்தி அழிந்துபோகக் கூடிய ஒரு பண்டம் என்பதை மறந்துவிடக்கூடாது. தொழிலாளியிடம் உள்ள அந்த சக்திக்கு உடனடியாக சந்தை விலை கிடைப்பது கட்டாயமானது. தொழிலாளிக்கு உடன் வேலை வேண்டும். தொழிலாளி தொழில் கிடைக்கும் வரை காத்திருக்கமுடியாது. அவ்வாறாயின் அவன் பட்டினி கிடந்து சாகவேண்டும். அவன் என்ன கூலியைக் கேட்கிறானோ அதனைக் கொடுக்காவிட்டால் அவன் விருப்பமின்றிக் குறைந்த கூலிக்கு முதலாளியிடம் வேலை செய்யவேண்டும். அக்கூலி அவன் பிழைப்பதற்குரிய மட்டத்திலும் குறைந்த கூலியாகும். அதனால் அவனால் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாது. இந்த நாட்டில் கடந்த 40 வருடங்களாக நடப்பது இதுவே அன்றி வேறு ஒன்றுமல்ல’ (நடேச ய்யர் 1925:10).[15]

தொழிலாளியின் பிழைப்புக்குத் தேவையான உணவு முதலிய பொருட்களின் அளவு, அவனுக்கு எத்தனை நாள் வேலை வழங்கப்படுகிறது என்பனவற்றைச் சரியாகக் கணக்கிட்டு தொழிலாளியின் வாழ்க்கைச் செலவு மட்டத்தை நடேசய்யர் கணக்கிட்டார். தரப்படுத்திய கூலி தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளுக்கே போதாது. அதனைவிட உயர்ந்த கூலி அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என நடேசய்யர் சிபார்சு செய்தார் (1925: 12).[16] ஆறுநாள் வேலையை முதலாளிமார் கொடுக்கும் கடப்பாடு உடையவர்கள் என்று குழு குறிப்பிட்டது. தொழிலாளர்களுக்கு ஆறுநாள் வேலை கொடுக்கப்படலாம். ஆனால் அதனால் ‘எந்தப் பயனும் இல்லை’ சட்டம் நடைமுறையில் பயனற்றதாகும் என்று அவர் வாதிட்டார்.[17] (நடேசய்யர் 1925:14). இதனைவிடத் தொழிலாளர்களில் தங்கியிருப்போரான குழந்தைகள், முதியவர்கள் தொகை அதிகரித்துச் செல்கிறது. 9 வயதுக்கு உட்பட்ட



சிறுவர்களையும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களையும் தொழிலாளர்களே பாதுகாத்து உணவளித்துப் போஷிக்க வேண்டும். இதனைக் குழு கவனத்தில் கொள்ளவேயில்லை என நடேசய்யர் குறை கூறினார். தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாதவர்களாகும்போது அவர்கள் அயலில் உள்ள நகரங்களில் பிச்சை எடுக்கிறார்கள். இது பகிரங்க இரகசியம். பிச்சைதான் தொழிலாளிக்குக் கிடைக்கும் முதுமைக் கால ஓய்வுதியம்; நீண்டகாலம் விசுவாசமாகப் பணியாற்றியதற்குக் கிடைத்த வெகுமதி. (1925:15).[18]

‘தமக்குக் கிடைத்ததை உண்டு வறுமையில் வாடி வதங்குவதற்காகத் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வரவில்லை. நீண்டநாள் உழைத்துவிட்டு இறுதியில் சீவியத்துக்கு ஒரு ஆதாரம் அவர்களுக்கு இருக்கவேண்டுமன்றோ? அவர்களது உற்றார் உறவினர்களுக்கு அவர்கள் சுமையாக இருக்கக்கூடாது’ (1925:20).[19] இலங்கை அரசாங்கம் ‘தோட்ட முதலாளிகள் திட்டப்படிதான் நடந்துகொள்ளும். அவர்களின் நலன்களுக்கு எதிராக எதனையும் செய்யாது’ என்று கூறி இக்கட்டுரை முடிகிறது (1925:22).[20] தொழிலாளர்கள் பற்றிக் கூறும்போது ‘அவர் களிடம் ஒரு ஒழுங்கமைப்பு இல்லை. இதனால் அநாதரவான நிலையில் உள்ளனர். வெளியார்கள் தொழிலாளர்களை அணுகிப் பேசவோ உதவவோ முடியாது. ஏனெனில் (தோட்டங்களுக்குள்) அத்துமீறிப் பிரவேசித்த குற்றத்திற்கு வெளியார் ஆளாவர். இதனைவிட வேறு தொந்தரவுகளும் ஏற்படும். பெருந்தோட்டங்கள் உள்ள பகுதிகளில் தொழிலாளர்கள் கூடுவதற்கு பொது இடம் என எதுவும் இல்லை.’

தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டுவதில் உள்ள பிரச்சினைகளை நடேசய்யர் நன்கு அறிந்திருந்தார். தோட்டங்கள் பிரதான பாதைகளில் இருந்து வெகு தூரத்தில் இருந்தன. கொழும்பு நகரில் இருந்தும் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன. அங்கு குறைந்த கூலி கொடுக்கப்பட்டது. வாழ்க்கை வசதிகள் இருக்கவில்லை. தொழிலாளர் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு வழி இருக்கவில்லை. தோட்டங்களில் உள்ள காவலாளிகள் அவ்வாறு தப்பி ஓடினால் பிடித்துவிடுவார்கள் (1925:20).[21]

‘நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தோட்ட முதலாளிகள் சமூகம், அக்கறையற்ற இந்தியர் சமூகம், தோட்ட முதலாளிகளால் வழிநடத்தப்

படும் அரசாங்கம் என்ற மூன்று தரப்பினரின் மத்தியில் தோட்டத் தொழிலாளர்கள் தம்மை ஓரணியில் திரட்டி உரிமைகளுக்காக போராடுவது என்பது இயலாத காரியமாகும்' (1925:23).[22]

முடிவாகக் கிடைக்கும் உண்மையாதெனில் இந்தியத் தொழிலாளர் களை இலங்கைக்கு அனுப்புவதை நிறுத்துவதே மேலானது என்பதே. '100 ஆண்டுகள் போராட்டங்களும் பேச்சுவார்த்தைகளும்' தராத பயனை இந்நடவடிக்கை தரும் என்றார் (1925:23).[23] இந்திய தொழிலாளர் வருகை என்ற விடயத்தில் நடேசய்யர் முன்னோடியான சிந்தனையாளர். இவரின் பின்னர் இலங்கை இந்தியர் காங்கிரஸ் 1930களில் இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியதற்கு அமைய 1939இல் இந்தியத் ரொழிலாளர்கள் இலங்கைக்கு வருவது முற்றாகத் தடைசெய்யப்பட்டது.

1920களில் பெரிய பிரித்தானியாவில் தொழிலாளர் இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. இதன் பயனாக 1926இல் வரலாற்றில் முதற் தடவையாக பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரஸ் பொது வேலை நிறுத்தத்தில் இறங்கியது. இந் நிகழ்வு ஏற்படுத்திய தாக்கங்களில் ஒன்று தொழிற்சங்க இயக்கத்தின் பலம் பற்றிய பொது விழிப்புணர்வு ஆகும். அத்தோடு தொழிலாளர் இயக்கத்தில் உள்ள புரட்சிகரப் பரிவினர் தொழிற்சங்க நடவடிக்கையை தமதாக்கிக் கொள்ளுவர் என்ற அச்சமும் எழுந்தது. இதைவிட பிரித்தானியாவில் 1924இல் குறுங்கால தொழிற்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது. பிரதமர் ராம்சே மக்டொனால்ட் 1926 இல் இலங்கை வந்த போது, நகரத் தொழிலாளர் யுனியன் அவருக்கு வரவேற்பு அளித்தது. பிரித்தானியாவின் தொழிற் சங்க சம்மேளனத்தின் உறுப்பினர்கள் இருவர் இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள தொழிலாளர்களின் நிலை பற்றி ஆராய்ந்தனர். அவர்களில் ஒருவரான ஏ.ஏ.புர்செல் (A.A.Purcell) என்பவர். இலங்கை யின் நகரத் தொழிலாளர் யூனியன் தலைவர் ஏ.ஈ. குணசிங்கவின் அழைப்பை ஏற்று 1927இல் இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கையின் தொழிற்ச ங்க இயக்கத் தலைவர்கள் யாவரையும் சந்தித்து, இலங்கைத் தொழிற்ச ங்கங்களுக்கு பிரித்தானிய சங்கங்களின் ஆதரவு தேவை என அறிக்கை சமர்ப்பித்தார் (ஜயவர்தன 1972:271-72)[24]. அவ்வேளை குண சிங்கவுடன் இணைந்து பணிபுரிந்த நடேசய்யர் பிரித்தானிய தொழிற் சங்க இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் தொடர்புகளையும் பெற்றுக்



கொண்டிருப்பார் என்றே கருதலாம். இலங்கை அரசாங்கமும், தோட்ட முதலாளிமார்களும் இந்தியா தொழிலாளர் வருகையைத் தடைசெய்து விடுமோ என அச்சமடைந்தனர். நகரத் தொழிலாளர் களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருப்பதையும் பற்றி அரசாங்கம் அச்சம் கொண்டிருந்தது. 1923ஆம் ஆண்டின் பொது வேலை நிறுத்தம் நகரத் தொழிலாளர்களின் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாய் அமைந்தது. தோட்டத் தொழிலாளர் மத்தியில் கிளர்ச்சி தோன்றிவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தியது. அவ்வாறு ஒரு கிளர்ச்சி ஏற்பட்டால் தோட்டங்களில் அமைதி குலைந்துவிடும் என்பது மட்டுமல்ல, இலங்கையின் பொருளாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுவிடும் என அரசாங்கம் அச்சம் கொண்டிருந்தது. இப்பின்னணியிலேயே அரசாங்கம் ஆகக்குறைந்த அடிப்படைக் கூலி பற்றிய சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது.

## 6. அகில இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்

1931ஆம் ஆண்டு நடேசய்யர் தலைமையில் அகில இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவே தோட்டத்துறையின் முதலாவது தொழிற்சங்கமாகும். நடேசய்யர் கவர்ச்சிமிக்க ஆளுமையுடைய சிறந்த அரசியல்வாதி' தொழிற்சங்கத் தலைவர். அவரின் முயற்சியால் தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கம் ஆரம்பமாகியது. தோட்டங்களில் தொழிற்சங்க இயக்கம் வளர்வதற்கான சூழ்நிலை 1920 ஆம் ஆண்டின் கல்விச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்டிருந்தது. இச் சட்டத்தின் பயனாக அடிப்படைக்கல்வி தோட்டங்களில் விருத்தியாயிற்று. கல்வி விருத்தியின் காரணமாக தோட்டத் தொழிலாளர்களிடையே தொழிற்சங்க இயக்கம் வளருவதற் கான சூழல் ஏற்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இவ் வுண்மையை விளக்குவதாய் உள்ளது. 1904 ஆம் ஆண்டில் தோட்டங்களில் 60 பாடசாலைகள் மட்டுமே இருந்தன. 1940 இல் பாடசாலைகளின் எண்ணிக்கையும், அவற்றில் கல்வி பயிலும் சிறுவர்களின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்ததைக் காணலாம்.

**தோட்டப் பாடசாலைகளில் கல்விகற்கும் சிறுவர்கள் எண்ணிக்கை**

| ஆண்டு | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | பாடசாலைக்கு செல்ல வேண்டிய வயதுடையவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1904 | 60 | 2,000 | தகவல் இல்லை |
| 1910 | 227 | 11,500 | தகவல் இல்லை |
| 1920 | 275 | 11,000 | 68,000 |
| 1930 | 501 | 26,000 | 78,000 |
| 1935 | 608 | 38,000 | 73,000 |
| 1938 | 784 | 44,000 | 77,000 |
| 1939 | 820 | 45,000 | 79,000 |
| 1940 | 845 | 47,000 | 80,000 |

ஆதாரம் : இந்திய முகவரின் ஆண்டு அறிக்கைகள்



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிக அடிப்படையான கல்வி அறிவு (எழுதுதல், வாசித்தல்) உடைய கணிசமான அளவான தொழிலாளர்கள் தோட்டங்களில் உருவாக்கம் பெற்றிருந்தனர். எழுத்தறிவு பெற்ற வாலிபர்களான தொழிலாளர்கள் தோட்டங்களில் தொழில் நடைமுறைகளில் இடம்பெறும் முறையீனங்களையும், கங்காணிகளின் மோசடிச் செய்கைகளையும் தட்டிக்கேட்கும் தகுதியும், துணிவும் உடையவர்களாய் இருந்தனர். அத்தோடு அவர்கள் நாட்டின் பொதுவான அரசியல் விடயங்களிலும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். வாசிப்பு அறிவுடையவர்கள் உள்நாட்டு அரசியல் விடயங்களை தமிழ்ப் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டதோடு பிறருக்கும் அவை பற்றித் தெரிவித்தனர். தோட்டங்களில் இந்தியப் பத்திரிகைகளுக்கும் நல்ல சந்தை வாய்ப்புக் கிட்டியது. தேச விடுதலைக் கருத்துக்கள் அவை மூலம் பரவின. 1931 ஆம் ஆண்டிலும் 1936 ஆம் ஆண்டிலும் இலங்கையில் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களையும் பிரசுரங்களையும் தோட்டத் தொழிலாளர்கள் மிகுந்த ஆவலோடு படித்தனர். அவற்றில் கூறப்பட்ட விடயங்களைத் தமக்குள் கலந்துரையாடினர். 1931 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதால் அரசியல் விடயங்களை ஆர்வத்தோடு படித்தனர். எழுத்தறிவு வளர்ச்சி காரணமாக அரசியல் வழிப்புணர்வுள்ளவர்களை அரசியல் நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் இணைத்துக் கொண்டனர். இலங்கை அரசியலில் மட்டுமல்லாது இந்தியாவின் தேச விடுதலை இயக்கத்திலும் தோட்டத் தொழிலாளர் அக்கறை செலுத்தினர். காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற தலைவர்கள் பற்றியும் அவர்கள் அறிந்து கொண்டனர். இத் தலைவர்கள் மீதும் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படலாயிற்று.

நடேசய்யரின் தொழிற்சங்கம் கங்காணி முறையை எதிர்ப்பதை தனது முதன்மைப் பணியாகக் கொண்டது. நடேசய்யர் கங்காணிகளையும், தோட்ட முதலாளிகளையும் எதிர்த்துப் பிரசாரத்தைச் செய்தார். 1940 ஆம் ஆண்டில் நடேசய்யர் கூறிய கூற்று ஒன்றினை இவ்விடத்தில் குறிப்பிடலாம். அவர் தமக்குக் கிடைக்கும் முறைப்பாட்டுக் கடிதங்களில் 95 வீதமானவை தலைமைக் கங்காணிகளையும் அவர்களுக்குக் கீழ் பணிசெய்பவர்களையும் பற்றியனவே எனக் குறிப்பிட்டார்.[25] தலைமைக்

கங்காணிகளைப் பற்றிய முறைப்பாடுகள் சில இவ்வாறு இருந்தன: தலைமைக் கங்காணி அரிசிக் களஞ்சியப் பொறுப்பாளராகவும் இருக்கிறார்; அவர் கடையும் வைத்து நடத்துகிறார்; தோட்டத்தில் களை புல்லு என்பன பிடுங்குதலுக்கான ஒப்பந்தம், தோட்ட பிள்ளைகளுக்கு உணவு வழங்குதலுக்கான ஒப்பந்தம் என்பவற்றை எடுத்து நடத்துகிறார்; தனது உறவினர்களுக்கு வேலை கொடுக்கிறார்.

இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தில் 1940 ஆம் ஆண்டு 37,000 தொழிலாளர்கள் உறுப்பினர்களாய் இருந்தனர். ஹட்டன், பதுளை, நுவரெலியா[26] ஆகிய இடங்களில் அதற்குக் கிளைகள் இருந்தன. சம்மேளனத்தில், கங்காணிமார், கங்காணிகளின் கீழ் பணிபுரிவோர் தவிர்ந்த எல்லாத் தோட்டத் தொழிலாளர்களும் அங்கத்தவர்களாகச் சேரமுடிந்தது. '(வேலை கொள்வோரான) முதலாளியும் அவரின் கீழ் வேலை செய்யும் தொழிலாளியும் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொள்ளுதல்', 'இடைத்தரகர்கள் இல்லாமல் முதலாளியும் தொழிலாளியும் தமக்கிடையே நல்ல புரிந்துணர்வை வளர்த்தல்'[27] என்பன சம்மேளனத்தின் நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டன.

'பொருளாதார முன்னேற்றம், சமூக முன்னேற்றம், உயர்ந்த அற ஒழுக்கமும் தொழிலாளர்களது பண்பாட்டு முன்னேற்றமும்' சம்மேளனத்தின் விரிந்த நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டன.[28] தொழிலாளர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வேலை நிலைமைகளை மேம்படுத்துதல், தொழிலில் நிரந்தரமாக்கப்படுதல், பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் என்பன பொருளாதார நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. தொழிலாளர்களுக்குக் கல்வியறிவை ஊட்டுதலும் தொழிற்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. தொழிலாளர்கள் தமது 'கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள், கடப்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்வதும்', 'தொழிலாளர்கள் மனதில் தன்னம்பிக்கையை வளர்ப்பதும்' (மேலது)[28] தொழிற்சங்கத்தின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 7. மீனாட்சி அம்மாள்

நடேசய்யரின் முதல் மனைவி அலமேலு என்பவர். அவர் இறந்து சில வருடங்கள் சென்ற பின் 1926 ஆம் ஆண்டில் மீனாட்சியம்மாளை அய்யர் மணந்து கொண்டார். மீனாட்சியம்மாள் 1925 ஆம் ஆண்டு இலங்கை வந்தார். இவரது முதலாவது கணவரின் பெயர் முத்துசாமி கவிராயர் ஆகும். உடுமலை முத்துசாமி கவிராயர் என அறியப்பட்ட இவர் சிறந்த நாடக ஆசிரியராகவும், தமிழ்ப்புலவராகவும் விளங்கினார். முதலாவது திருமணத்தின் மூலம் மீனாட்சியம்மாளுக்குப் பட்டம்மாள், சண்முகம் என்ற பெயருடைய இரு பிள்ளைகள் இருந்தனர். பட்டம்மாளைச் சாரநாதன் என்பவர் விவாகம் செய்தார். சாரநாதன் இலங்கை வந்து தொழில் செய்து வந்தார். தமது மகள் பட்டம்மாளின் நன்மை கருதி மீனாட்சியம்மாள் கொழும்பு வந்தார்.[29]

இந்தியாவில் கணவனுக்கு அடங்கிய பெண்ணாக மரபுவழிச் சமூகத்தின் விதிமுறைகளுக்கு பழக்கப்பட்ட ஒருவராக வாழ்ந்து வந்த மீனாட்சியம்மாள் கொழும்பு வந்ததும் அவருள் அடங்கியிருந்த திறமைகள் யாவும் வெளிப்படக் கூடிய வகையில் பொது வாழ்க்கையில் தம்மை இணைத்துகொண்டார். தேசபக்தன் காரியலயத்தில் வேலை செய்யத் தொடங்கிய மீனாட்சியம்மாள் நடேசய்யரின் அன்பையும் மதிப்பையும் பெற்ற ஒருவரானார்.

1930களில் அவர் நடேசய்யரின் துணைவியென்ற வகையிலும் தோட்டத் தொழிலாளர்களின் ஒடுக்குமுறையினைப் பற்றிப் பாடல்கள் இயற்றியவர் என்ற வகையிலும் பிரபலம் பெற்றார். அவரது ஒன்பது பாடல்கள் கொண்ட கவிதைத் தொகுப்பு 'இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை' என்ற தலைப்பில் 1940 ஆம் ஆண்டு பிரசுரமானது. அந்த நூலின் முன்னுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> 'இலங்கையில் வாழும் இந்தியர்களது நிலை வர வர மோசமைடைந்து செல்கிறது. இந்திய மக்கள் ஐக்கியப்பட்டுத் தமது உரிமை களைப் பெறுவதற்கான காலம் வந்துவிட்டது. உரிமைப் போராட்டத்திற்கான பிரசாரம் பாடல்கள் மூலம் மேற்கொள்ளப் படுதல் பயன் தருவது. இதனால் தான் நான் இலங்கை வாழ்

இந்தியர்களின் நிலை பற்றிப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி யுள்ளேன். இந்தியர்கள் வீணே சோம்பிக் கிடக்காது விழித்தெழுந்து தமது உரிமைகளுக்காக உறுதியோடு போராட வேண்டும். இப் பாடல்கள் அதற்கான தூண்டலை வழங்கும் என்பது எனது நம்பிக்கை.'[30]

பொது நிகழ்வுகளின் போது மக்கள் கூட்டத்தில் மீனாட்சி அம்மாள் உரையாற்றுவார். பாடல்களை மேடைகளில் பாடுவார். 1928 ஆம் ஆண்டு முதல் தமது கணவர் நடேசய்யருடன் அவர் இணைந்து தேசபக்தன் என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். அப்பத்திரிகையில் பெண்கள் உரிமைகள் பற்றிய விடயங்களை எழுதினார். அக்காலத்தில் இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமா என்ற விடயம் விவாதப் பொருளாக இருந்தது. பெருந்தோட்ட தொழிலாளர் களின் வாக்குரிமை பற்றியும் விவாதிக்கப்பட்டது. மீனாட்சியம்மாள் அவ்விவாதத்தில் பங்குகொண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதற்கு ஆதரவாக எழுதினார்.

1927 ஆம் ஆண்டில் பெண்களின் வாக்குரிமைச் சமாசம் என்ற பெயரில் கொழும்பில் ஒரு அமைப்பு தொடங்கப்பட்டது. மீனாட்சி யம்மாள் இவ்வமைப்பில் சேர்ந்து செயல்பட்டார். அக்காலத்தின் பிரபல அரசியல்வாதிகள் பலரின் மனைவியரும், உயர் தொழில்களில் இருந்த பெண்கள் பலரும் இவ்வமைப்பில் சேர்ந்திருந்தனர். சிங்களவர், தமிழர், பறங்கியர், கொழும்புச் செட்டிகள் போன்ற பல இனத்தவர்களைச் சேர்ந்த நடுத்தர வகுப்புப் பெண்கள் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். பெண்கள் சமத்துவம் பற்றி மேடையில் பேசுவதும் பத்திரிகையில் எழுதுவதுமாக இருக்கும் தலைவர்கள் சிலர் வீட்டில் சமத்துவம் பேணுவதில்லை என மீனாட்சியம்மாள் கண்டனம் செய்து பேசினார். சர்வசன வாக்குரிமை விடயத்தில் அன்று தேசியத் தலைவராக விளங்கிய சேர். பி. இராமநாதனை ஆணாதிக்கவாதி எனக் கண்டனம் செய்தார். அவர் பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கக் கூடாது என்று கூறியது மட்டுமல்லாமல் இலங்கைப் பெண்களுக்கு வாக்குரிமை யளிப்பதை பன்றிகளின் முன்னால் முத்துக்களை வீசுவதற்கு ஒப்பாகும் என்று கூறினார் (டி அல்விஸ் மற்றும் ஜயவர்த்தன 2001)[31]. இவரது கூற்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் மீனாட்சியம்மாள் பின்வருமாறு எழுதினார்: 'இந்தியாவை விட இலங்கை முன்னேறிய நாடு என்று





*நடேசய்யரின் மனைவி மீனாட்சியம்மை*

கூறப்படுகிறது. ஆனால் வாக்குரிமை பெண்களுக்கு வழங்கக்கூடாது என்று இங்குள்ளவர்கள் கூறும்போது இதனை முன்னேறிய நாடு என்று எப்படிக்கூறுவது?' (தேசபக்தன் 13 ஏப்பிரல் 1928). கொழும்பு நகரை மையமாகக் கொண்ட பெண்கள் வாக்குரிமைச் சமாசத்தையும் மீனாட்சியம்மாள் கண்டனம் செய்தார். அச்சமாசம் ஆண்டு ஒன்றிற்கான அங்கத்துவப் பணமாக ரூ.50/= அறவிட்டதையும், ஆங்கிலம் படித்தவர் களின் இந்த அமைப்பு ஆங்கிலம் தெரியாத சகோதரிகளைப்பற்றி அக்கறை செலுத்தாததையும் கண்டித்தார்.

'இந்தச் சமாசம் எதிர்காலத்தில் பல விடயங்களைச் சாதிக்க வேண்டியுள்ளது. சாதாரண வருமானம் உள்ள ஒருவருக்கு சமாசத்தின் ஆண்டு சந்தாத் தொகை அவரின் சக்திக்கு அப்பாற்பட்டது. சமா சத்தின் நடவடிக்கையில் பணக்காரர் மட்டுமல்ல யாவரும் பங்குபற்ற வேண்டும். பெண்களுக்கான வாக்குரிமை இயக்கத்தில் பங்குபற்றி தமது ஆதரவைக் கொடுக்கவேண்டும். ஆங்கிலம் தெரியாத சகோதரிகள் மத்தியில் எமது பிரசார இயக்கத்தை எடுத்துச் செல்லுதல் காலத்தின் தேவையாகும். (தேசபக்தன், 26 ஜன 1929 - டி அல்விஸ் மற்றும் ஜயவர்த்தன 2001: 58 - எடுத்தாளும் மேற்கோள்)[32]

ஆண்களின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட வாக்குரிமை கோரும் அமைப்புக்களுக்கு மாறாக, பெண்கள் வாக்குரிமைச் சமாசம்

தோட்டப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. இவ்வமைப்பின் பிரதிநிதியாக டொனமூர் ஆணைக்குழு முன்னால் சாட்சியமளித்த அக்னிஸ் டி சில்வா அது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

நாங்கள் ஆணைக்குழு முன் தோன்றி துணிச்சலோடும் உணர்வோடும் பதில் கூறினோம். நாம் முன்கூட்டியே தயார் செய்து கொண்டு போகாத கேள்விகளுக்கும் பதிலைக் குறித்து வைத்துக்கொண்டேன். தோட்டங்களில் வேலைசெய்யும் இந்தியர்களான தமிழ்ப் பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா என்று டொனமூர் பிரபு கேட்டார். "நிச்சயமாக அவர்களும் பெண்களே, எல்லாப் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம்" என நான் பதிலளித்தேன்.

நடேசய்யரும் மீனாட்சியம்மாளும் தொழிலாளர்களுக்காகப் போராடியவர்கள்; அரசியல்வாதிகள்; தீர்க்கதரிசனம் மிக்கவர்கள். தமது பேச்சாற்றலாலும், ஒழுங்கமைப்புத் திறனாலும் தொழிலாளர்களை அணிதிரட்டி அவர் தம் வேலை நிலைமைகளை முன்னேற்றவும் நியாயமான கூலியை பெறவும் எல்லாப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் பிரஜைகளுக்கும் உரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் போராடினர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் கூலியில் வேறுபாடு இருக்கக் கூடாது. சமத்துவமான கூலி வேண்டும் என்றனர். தொழிலாளர்களுக்கு உயர்ந்த கூலி வழங்கப்படவேண்டும் என்பதற்காகவும் அவர்களின் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் போராடிய முன்னோடியான தலைவர்கள்.



**அடிக் குறிப்புகள்**

1. சாரல் நாடன், மலையக நிர்மாணச் சிற்பி கோ.நடேசய்யர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2009:8
2. மேலது : 8
3. மேலது : 10
4. சாரல் நாடன், மலையக விடிவெள்ளி கோ.ந மீனாட்சியம்மாள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2015:7
5. Jayawardene, K., The Rise of the Labour Movement in Ceylon, Duke University Press, 1972:337
6. மேலது : 10
7. Natesaaiyar, K., Under Planter Raj, 1925:9
8. Kurian Rachel, State Capital and Labour in the Plantation Industry in Sri Lanka 1834-1984, Thesis, University of Amsterdam 1989:126-31
9. Planters Association Year Book 1925: 16 - 17
10. மேலது
11. நடேசய்யர், மேலது 4-5
12. நடேசய்யர், மேலது : 6
13. நடேசய்யர், மேலது : 7
14. நடேசய்யர், மேலது : 10
15. நடேசய்யர், மேலது : 16
16. நடேசய்யர், மேலது : 12
17. நடேசய்யர், மேலது : 14
18. நடேசய்யர், மேலது : 15
19. நடேசய்யர், மேலது : 20
20. நடேசய்யர், மேலது : 22
21. நடேசய்யர், மேலது : 20
22. நடேசய்யர், மேலது : 22
23. நடேசய்யர், மேலது : 23

24. Jayawardene மேலது : 271-272

25. Ceylon Indian Workers Federation Report

26. Administration Report of Controller of Labour, 1944.

27. Ceylon Indian Workers Federation Constitution

28. Ibid

29. சாரல் நாடன், மேலது 2015 : 7-8

30. மீனாட்சியம்மாள், இந்தியத் தொழிலாளர் வாழ்க்கை நிலை, பெண்கள் கல்விக்கும் ஆய்வுக்குமான நிலையம், கொழும்பு, 1991 (1940)

31. De Alwis and Jayawardene, K., Casting Pearles : Women Francise Movement in Sri Lanka, Colombo, Social Scientist Association 2001

32. மேலது : 58